LIBRARY
22 DEC 2016
UNIVERSITY SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

இரண்டாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013/2014
(ஒக்டோபர் / நவம்பர் 2016)

## TLS 2123 தொல்காப்பியம்: எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்

## Tholkapiyam: Eluthathikaram & Sollathikaram

நேரம்: 03 மணித்தியாலயங்கள்

முதலாம் பகுதியில் முதலாம் வினா உள்ளிட்டு இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலிருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

---

### பகுதி – 1

01) பின்வரும் நூற்பாக்களின் பொருளை எழுதுக.

அ) எழுத்தெனப் படுவ
அகரமுதல் னகர இறுவாய்
முப்ப.்.தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே

ஆ) உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அ.்.றிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே

இ) இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப் பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றின்
சுட்டுப் பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்

ஈ) பொருண்மை தெரிதலுஞ் சொன்மை தெரிதலும்
சொல்லினாகு மென்மனார் புலவர்

உ) மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்
தம்முன்தாம் வரூஉம் ரழஅலங் கடையே (05x04 = 20 புள்ளிகள்)

02) அ) எழுத்துக்களின் பொதுவான பிறப்பு குறித்து தொல்காப்பியர் யாது கூறுகின்றார்? (05 புள்ளிகள்)

ஆ) மெய் எழுத்துக்களின் பிறப்பு குறித்து தொல்காப்பியர் கூறுவதை விளக்குக. (15 புள்ளிகள்)

03) அ) மொழியியல் என்றால் என்ன? (05 புள்ளிகள்)

ஆ) தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை மொழியியல் பின்னணியில் ஆராய்க. (15 புள்ளிகள்)

## பகுதி – II

04) தமிழில் மூவிடப் பெயர்கள் பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றைத் தந்து, மூவிடப் பெயர்களின் அமைப்பில் ஏற்பட்டு வந்த மாற்றங்கள் குறித்துப் பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

05) தொல்காப்பியர் கூறும் வேற்றுமைப் பாகுபாட்டினை சுருக்கமாக விளக்கி அவற்றுள் **மூன்றாம்** வேற்றுமையின் தற்காலப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

06) வினைச்சொற்கள் பால் உணர்த்தும் முறைமையினை தொல்காப்பியம் வினையியல் பகுதியை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(20 புள்ளிகள்

07) இடைச்சொல்லின் பண்புகளைக் குறிப்பிட்டு உம், ஓகார இடைச்சொற்கள் தமிழ்ச் சொல்லாக்கத்திற்கு உதவுமாற்றினை உதாரணங்களுடன் விளக்குக.
(20 புள்ளிகள்

*************************************